RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s84

# தமிழ்ச் செவ்வியல் காப்பியங்களில் பௌத்த சமய நெறிகள்

பொ. சரவணன் [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# Buddhist Ethics in Tamil Classical Epics

P. Saravanan [a, *]

[a] PG Research Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur–635601, Tamil Nadu, India

* Corresponding Author: saravanantamil114@gmail.com

Received: 01-05-2021
Revised: 28-04-2022
Accepted: 02-05-2022
Published: 26-06-2022

Check for updates

**ABSTRACT**

The religious doctrine of the two epics is that the religions in the twin epics do not show any distinction. Doctrine is the code of ethics followed by all religions. The protocol is that when the script is great, it becomes a theory when it outlines the steps to follow. Thus, the doctrines of Buddhism in Manimekalai are present throughout the epic. In the Silapathikaram, the religion of Jainism can be seen in the manner in which it is presented with minor principles. Silappathikaram and Manimegalai which are found under the common name of Kapiyam in terms of structure, are to show the general characteristics of this concept. The look of the coffee is common to both. It can be seen that both religion and general doctrines have something in common. The subject of this article is to explore the method used by Buddhism to spread its religious doctrine, the narrative internal design of the dual epics. It has been established on the basis of evidence that the internal structure of the story mantra and the copy cell supports it.

**Keywords:** Buddhist Ethics, Buddhism in Tamil Nadu, Twin Epics, Religious doctrine

## முன்னுரை

தொகை நூல்களின் பாடுபொருள் காதல், வீரம் என்பதோடு பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையும் சமயமற்ற பிண்ணனியினை அறிவித்து அமைகின்றன. அக்காலத்திய வாழ்க்கை முறையில் இயற்கை நெறித் தவழ்ந்ததைச் சங்கப் புலவர்கள் சான்று பகர்வர். உயர் விழுமியங்களாகப் (High Values) போற்றப் பட்டவைக் கீழ்க்கணக்கு நூல்களால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன. அதேவேளையில் புறச் சமயங்களின் விழுமியச் சட்டகம் இலக்கியங்கள் வழியே எடுத்துரைக்கப்பட்டன. அதற்கான உயரிய கருவியாகக் காப்பியங்கள் பயன்படுத்தப்பட்டன. அதனுள் பௌத்த சமயம் தம் நெறியினைக் காப்பியங்களில் உதிர்த்துச் செல்லும் இடங்கள் உற்று நோக்குதற்குரியனவற்றைத் தொகுத்தளிப்பது தேவையாகும். திணைப் புலவர்களின் பாடல்கள் சமய மரபினை மறுத்துப் பேசுகின்றது. இந்நிலையில் அறம், துறம் வலியுறுத்திய காப்பியங்கள் தம் நெறியினைப் கதாப்பாத்திரங்கள் வழியே பரப்பும் பாங்கு பதிவு செய்யப் படவேண்டும். அதற்காகக் காப்பியங்கள் கைக் கொள்ளும் இலக்கிய உத்திகளைக் கணக்கில் கொண்டு தமிழ்ச் செவ்வியல் காப்பியங்களில் பௌத்த சமய நெறிகள் வாயிலாக வெளிக்கொணருவதை முதன்மைப் பணியாக இக்கட்டுரைக் கொண்டுள்ளது.

## தமிழ்ச் செவ்வியல் காப்பியங்கள்

தமிழில் தொன்மைக் காலத்திலேயே காப்பியங்கள் இருந்திருக்க வேண்டும் என்றாலும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள், கிடைத்துள்ள காப்பியங்களை வகுத்தும் தொகுத்தும் அவற்றைப்

பாகுபாடு செய்துள்ளனர் (Stalin, 2021). தமிழின் தொன்மையான இலக்கிய வடிவங்களில் காப்பியங்களும் ஒன்று என்பதனையும், அவை அளவால், பொருளால் பகுக்கப்பட்ட திறத்தினையும், "கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில் தமிழ்மொழி காப்பிய நிலத்தில் அடியெடுத்து வைத்தது. சிலப்பதிகாரம் தோன்றியது. இதுவே தமிழின் முதல் காப்பியம். இதனைத் தொடர்ந்து மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி முதலான நூல்கள் இயற்றப்பட்டன. இவை ஐந்தும் ஐம்பெரும் காப்பியங்கள் எனப் பெயர்பெற்றன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்களாகப் போற்றப் பெறுகின்றன. காரணம், 'இளங்கோ பாட சாத்தனார் கேட்டார்' என்ற பதிகச் செய்தி இதற்குக் காரணமாகலாம். அதோடு மட்டுமல்லாது சிலப்பதிகாரம் முன்கதை அதன் தொடர்ச்சியான பின்கதையாக மணிமேகலை அமைவதாகும். இரண்டு காப்பியங்களும் முப்பது காதைகளைக் கொண்டமைந்தவை. மணிமேகலைக் காப்பிய நிகழ்ச்சிகள் பலவற்றிற்குக் காரணங்கள் சிலப்பதிகாரக்கதையில் உள்ளவாறு காட்டப்படுதலும், சிலப்பதிகார நிகழ்ச்சிகள் சிலவற்றிற்கு மணிமேகலை விளக்கம் போன்றிருத்தலும் இவை இரண்டும் இரட்டைக் காப்பியங்கள் என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளன. இலக்கியங்களைச் சமயப் பிரசாரத்தின் கருவிகளாகவே பயன்படுத்தியிருக்கின்றனர் (Suresh & Kalathi, 2020). பெரிய சமயங்கள் என்று நாம் அடையாளப்படுத்தி வைத்திருக்கின்ற ஒவ்வொன்றும் தங்களுக்கென்று எழுதப்பட்ட புனிதப் பிரதிகளை வைத்திருக்கின்றன. தன் சமயக் கருத்துக்களையும் கொள்கைகளையும் பரப்புவதற்கு இலக்கியங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழ் இலக்கியத்திற்குள் இதற்கான சான்றாதாரங்கள் ஏராளம் இருக்கின்றன. கிறித்தவம், இஸ்லாம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சாருவாகம் ஆசீவகம் என்று பல்வேறுபட்ட சமயங்களின் கருத்துக்கள் குறும்பாடலாகவும், பேரிலக்கிய வடிவங்களிலும் உள்ளன (Nirmaladevi, 2019; Sudhakar, 2021; Stalin, 2021). "கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றாம் நூற்றாண்டில் அரசன் சந்திரகுப்த மௌரியரின் காலத்திலும் அவரது இரத்த தொடர்புடைய அசோக மன்னனது காலத்திலும் சமணமும், பௌத்தமும் தமிழகத்திற்கு வந்தன" வேங்கடசாமி. சீனி. மயிலை என்கிறார் (Srinivasan, 1997).

இலக்கியத் தத்துவ மரபில் வைதீக அவைதீக கருத்துகளுக்கு இடையில் நடந்த போரட்டங்கள் மிக முக்கியமானதாகும். சமத்துவமின்மைக்கும் ஏற்றத்தாழ்வுக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரான போராளியாகப் புத்தர் திகழ்ந்தார் (Venkatacami, 1950). அவருடைய கொள்கைகள் ஏற்கப்பட்டு தென்னிந்தியாவில் தமிழகத்தில் பரவிய போது, அவற்றை எடுத்துக் கூறும் வகையில் திறமுடன் நிலைநாட்டும் வகையில் இலக்கிய, இலக்கண நூற்கள் உருவாயின. அவற்றுள் தலைச்சிறந்த நூலாகக் கருதப்படுவது மணிமேகலைக் காப்பியம். பெண் என்பவள் வெறும் காமக் கூடமல்ல, அவள் சாதிக்கப்பிறந்தவள், சவால்களை எதிர்கொள்ளுபவள், சகாப்தத்தைப் படைத்துக் காட்டக் கூடியவள், அதனாலேயே மணிமேகலைக் காப்பியத்தைச் பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் புரட்சிக்காப்பியம் என்றார் (Srinivasan & Kaamaraasan, 2014).

தமிழ் காப்பிய உலகில் துறவை மட்டும் வைத்து காப்பியம் பாடிச் சிறப்பித்தார் சாத்தனார். தமிழில் இரட்டைக் காப்பியங்களாக இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரமும், சாத்தனார் எழுதிய மணிமேகலையும் அறியப்படுகின்றன. ஒன்றின் தொடர்ச்சியாக மற்றொன்று இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. சிலப்பதிகாரம் முந்தியது, மணிமேகலை பிந்தியது என்றும் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தை எழுதுவதற்கான செய்திக் குறிப்புகளை இளங்கோவடிகளுக்கு மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் எடுத்துரைத்தார் என்ற கருத்தும் இருக்கிறது. சிலப்பத்காரத்தின் காட்சிக்கதை வரிகள் (67 - 90) இதனைத் தெரிவிக்கின்றன (Srinivasan, 1997). இதன் அடிப்படையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுத, சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தை எழுதினார் என்னும் ஒரு வரலாற்றுப் புரிதல் இருக்கிறது. கதை மாந்தர் புறத் தோற்றமும் பௌத்த நெறியும் மணிமேகலை பௌத்தத் துறவியாக, பௌத்தக் கருத்துக்களை எடுத்துரைக்க வந்த பெண்ணாக, பௌத்த அறங்களை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வந்த பெண்ணாக நமக்கு அறிமுகப்படுத்துகிற பாத்திரமாக அமைத்திருக்கிறது. மணிமேகலை பௌத்தத்தைத் தழுவிய செய்தி சிலப்பதிகாரத்தில் கிடைக்கிறது என்றாலும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிற பௌத்தம் தழுவிய மணிமேகலைக்கும், மணிமேகலை குறிப்பிடும் பௌத்தம் தழுவிய மணிமேகலைக்கும் இடையில்

வேறுபாடுகள் இருக்கின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை பௌத்தம் தழுவியபோது தலைமுடியை முழுவதும் மழித்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறது.

“பருவம் அன்றியும் பைந்தொடிநங்கை

திருவிழைக் கோலம் நீங்கினள்”

“கோதைத்தாமம் குழலொடு களைந்து

போதித்தானம் புரிந்து அறம்படுத்தனள்”

ஆகிய வரிகள் உறுதிப்படுத்துகின்றன (Srinivasan & Kaamaraasan, 2014; Puliyur Kesigan, 2018). ஆனால் மணிமேகலைக் ப்பியமோ மணிமேகலையைக் கூந்தல் உடையவளாகச் சித்தரிக்கிறது.

“மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்”

இவ்விரு காப்பியங்கள் தரும் குறிப்புகள் வேறுபாடு கொண்டவையாக இருந்தாலும், அவை ஒன்றுபடும் புள்ளியாக இருப்பது மணிமேகலை பௌத்த மரபைப் பின்பற்றியவள் என்ற கருத்து உண்மையாகிறது (Venkatacami, 1950). மணிமேகலைக் காப்பியத்தின் 27-வது காதையாக இடம் பெற்றுள்ள சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை பிற சமயங்களுடன் பௌத்தம் நிகழ்த்திய உரையாடலின் சான்றாய் அமைந்துள்ளது. பிரமவாதி, வைஷ்ணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, தருமவாதி, அதன்மாவதி, சாக்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகியோருடன் மணிமேகலை என்னும் பௌத்த துறவி உரையாடுகிறாள். இந்த காதை நமக்கு சில கருத்துகளை விளக்குகிறது. மணிமேகலை காப்பியம் உருவான காலக்கட்டத்தில் தமிழ் நிலப்பரப்பில் இருந்த பல்வேறு சமயங்கள், தத்துவக் கோட்பாடுகள் சார்ந்த விளக்கங்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஒவ்வொன்றின் சாரமாக அமைந்த சிந்தனைப் போக்குகள் குறித்த தகவல்களும் நமக்குக் கிடைக்கின்றன (Somasundaram, & Tejus Murthy, 2016). மணிமேகலைக் காப்பியத்தில் ஒரு முக்கியக் கூறாக இருப்பது பழம் பிறப்பு பற்றிய குறிப்புகள். உதயகுமாரன் என்னும் கதாபாத்திரத்தின் வழியாகப் பழம் பிறப்பு குறிப்புகள் நிறைய குறிப்பிடுகின்றன (Jeyapaalan, 2014). பூதவாதியின் வழியாக தகவல்கள் மறுபிறப்பை ஏற்க மறுப்பதாகத் தெரிகிறது. இம்மையும், இம்மைப்பயனும் ஆகியன எல்லாம் இப்பிறப்புடனே முடிந்து விடுகிறது. மறுபிறப்பு, வினைப்பயனை அனுபவித்தல் என்பது வடிகட்டின பொய் என பூதவாதி கூறுவதாக மணிமேகலை குறிப்பிடுவதை,

“இம்மையும் இம்மைப் பயனும் இப்பிறப்பே

பொய்ம்மை மறுமை உண்டாய் வினைதுய்தல்”

இப்பாடல் அடிகளின் மூலம் காணலாம் (Jeyapaalan, 2014).

## காப்பியங்களில் பௌத்த நெறிகள்

பௌத்தம் தமிழ் நிலப்பரப்பில் உடனடியாக எதிர்கொண்ட மற்றொரு சமயமாக இருந்தது சமணம். சமணத்தை எதிர்கொண்ட பௌத்தம் அதன் மீதான வன்மத்தை வெளிப்படுத்த சமணம் குறித்த பலவாறான புனைவுகளையும் உருவாக்கியது. அதனைப் பரப்பவும் செய்தது என்பதற்கு மணிமேகலையின் சான்று ஆதாரங்கள் இருக்கின்றன. மலர்வனம் புக்க காதையில் இடம் பெற்று இருக்கும் சுதமதியின் வரலாறு பௌத்தம் சமணத்தின் மீதான வன்மத்தை வெளிப்படுத்துகிறது. சுதமதியின் தந்தை கௌசிகன் (அந்தணன்) தாயில்லா தனது மகள் சுதமதியைப் பாதுகாத்தான்.

சுதமதி ஒரு நாள் தோட்டத்தில் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒருவன் அவளைத் தூக்கிச் சென்று காவிரிப்பூம்பட்டினத்தில் விட்டுச் சென்றான். சுதமதி சமணப்பள்ளியில் வாழ்ந்துவந்ததால் மகளைக் காணாத அவளது தந்தை கௌசிகன் ஒரு நாள் காவிரிப்பூம்பட்டிணம் வந்த பொழுது மகள் சுகமதியைக் கண்டு அங்கேயே தங்கிப் பிச்சை எடுத்து சுதமதியைப் பாதுகாத்தான். ஒரு நாள் கௌசிகனைப் பசு ஒன்று முட்டிக் குடல் சரிந்து விட்டது. கௌசிகன் தன் சரிந்த குடலுடன் அருகில் உள்ள சமணப் பள்ளியில் சென்று மருத்துவமும் அடைக்கலமும் கேட்டான். அவர்கள் தர

மறுத்ததுடன் அவனையும், சுதமதியையும் சமணப்பள்ளியில் இருந்து வெளியேற்றவும் செய்தனர். அவ்வேளையில் அவ்விடம் வந்த சங்க தருமன் என்னும் பௌத்தத் துறவி அவர்களுக்கு உதவினான் என்று குறிப்பு வருகிறது. இது சமணத்தின் மீதான பௌத்த வன்மமாகவே வெளிப்படுகிறது (Monius, 2000). ஏனெனில் தங்களை நாடி வந்தவர்களை அடைக்கலம் கொடுத்து பராமரிப்பதும், நோயுற்றவர்களுக்கு மருத்துவம் கொடுப்பதும், சமணத்தின் அடிப்படையான நான்கு கோட்பாடுகளில் ஒன்று. புற இரண்டு உணவு, கல்வியும் ஆகும். ஆனால் மணிமேகலையே சமணத்திற்கு இத்தகைய தன்மை இல்லை என்பதுடன் இவையெல்லாம் பௌத்ததிற்கு உரியது என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

## முடிவுரை

தமிழ்ச் செவ்வியல் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய இரண்டு காப்பியத் தன்மை மிகுந்து தமிழின்பம் நல்கும் நூல்களாக அமைந்துள்ளன. இவற்றில் அமையக்கூடிய பௌத்த சமய நெறிகள் மிகவும் போற்றப்படுகிறது. இந்தியாவில் சமயங்களைப் பின்பற்றிய படைப்பாளர்கள் சமயங்களைப் பரப்பவும், தம் கொள்கை மற்றும் நெறிகளை மக்களுக்கு உணர்த்தவுமே காப்பியங்களைப் படைத்தனர் என்ற சிந்தனை உருவாகிறது. இரட்டைக் காபியங்கள் வாயிலாகக் கதை மாந்தர் புறத் தோற்றமும் பௌத்த நெறியும், கதை மாந்தர்களின் குணங்களையும் பௌத்தச் சமய நெறிகள் எவ்வாறு அமைகின்றது என்பதையும் அறியலாயிற்று. ஆகவே, சிலப்பதிகாரம், மணிமேகலையில் பௌத்தக் கருத்துகள் எவ்வாறு அமைந்தது என்பதனை இக்கட்டுரை உணர்த்துகிறது.

## References

Jeyapaalan, K., (2014) Pauttat Tamil Ilakkiya Varalaru, Meththa Pathipagam, Chennai, India

Monius, A.E., (2000) Literary Theory and Moral Vision in Tamil Buddhist Literature, Journal of Indian Philosophy, 28, 195–223. https://doi.org/10.1023/A:1004717424936

Nirmaladevi, P., (2019). Uruthiporul in Seera puranam, International Research Journal of Tamil, 1(3), 15-23. https://doi.org/10.34256/irjt1933

Puliyur Kesigan, (2018) Manimegalai Moolamum Uraiyum, Saradha Publications, Chennai, India

Somasundaram, O., & Tejus Murthy, A.G., (2016) Manimekalai: The ancient Buddhist Tamil epic, its relevance to psychiatry, Indian journal of psychiatry, 58(2), 229–232. https://doi.org/10.4103/0019-5545.183788

Srinivasan, R., (1997) Silapathikaram Moolamum Thiranaivum, Aniyagam Publication, Chennai, India

Srinivasan, R., Kaamaraasan, K., (2014) Manimekalaiyil Samayamum Meyyiyalum, Meththa Pathipagam, Chennai, India

Stalin, S., (2021). Emerging Religious Trends through the Ages, International Research Journal of Tamil, 3(S-1), 29-33. https://doi.org/10.34256/irjt21s15

Sudhakar, K., (2021) The theory of Theosophical Structure of Ilango Adigal, International Research Journal of Tamil, 3(S-2), 234-238. https://doi.org/10.34256/irjt21s244

Suresh, R., Kalathi V., (2020) Jainism and Buddhism in the life of the Tamil Subaltern People, International Research Journal of Tamil, 2(3), 194-201. https://doi.org/10.34256/irjt20319

Venkatacami, M.C., (1950) Pauttamum tamilum, Tirunelveli tennintiya Saivacittanta nurpatippuk kalakam Ltd, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License